www.Padasalai.Net www.CBSEtips.in

19

# காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2023

12-ஆம் வகுப்பு | வரலாறு | மதிப்பெண்கள் : 90

காலம் : 3.00 மணி

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம் ஈ) பால கங்காதர திலகர்

3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பம்பாய் சுதேசி சாட்சி – ஆங்கில மடம்
ஆ) G.சுப்ரமணியம் – விடுதலைக் கழகம்
இ) மின்டோ பிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904.
ஈ) தீவிர தேசியவாத மையம் – சென்னை

4. கல்கத்தாவில் அனுசீலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிகாரி தாஸ் ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதீந்திரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ் ஈ) குதிராம் போஸ் மற்றும் பிரபுல்லா சாக்கி

5. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது ?
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

6. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலன்டைன் சிரோல் இ) திலகர் ஈ) அன்னிபெசன்ட்

7. 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் -ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுயராஜ்ய கட்சி ஆ) கதார் கட்சி இ) சுதந்திரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

8. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் கால வரிசைப்படுத்துக.
i) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
ii) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.
iii) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.
iv) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.
அ) 2,1,4,3 ஆ) 1,3,2,4 இ) 2,4,1,3 ஈ) 3, 2, 4, 1

9. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது ?
அ) மதராஸ்–அரக்கோணம் ஆ) பம்பாய் – பூனா இ) பம்பாய் – தானே ஈ) கொல்கத்தா – ஹுக்ளி

10. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1852 ஆ) 1854 இ) 1861 ஈ) 1865

11. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
அ) 12 மாகாணங்கள் ஆ) 7 மாகாணங்கள் இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்

12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ) அன்னிபெசன்ட் | – | 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | – | 2. தயானந்த சரஸ்வதி |
| இ) சிவயத் இயக்கம் | – | 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | – | 4. அலி சகோதரர்கள் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (அ) | 3 | 1 | 4 | 2 |
| (ஆ) | 1 | 2 | 3 | 4 |
| (இ) | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) | 2 | 3 | 4 | 1 |

13. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

14. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி "என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்ட மறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

15. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன் முதலில் எழுப்பியவர்........
அ) பொட்டி ஸ்ரீராமலு ஆ) பட்டாபி சீத்தாராமையா இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி. பிரகாசம்

16. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

17. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

18. 1951 ஆம் ஆண்டு இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?
அ) 5 ஆ) 7 இ) 6 ஈ) 225



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner

19. கூற்று : ஜமீன்தாரி முறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது .
காரணம் : பல நிலச்சுவான்தாரர்கள் குத்தகைகாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயகட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினார்.
அ) கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை விளக்குகிறது .
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி.

20. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?
அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.வினா எண் 30 கட்டாய வினா 7 x 2 = 14

21. தேசியம் என்றால் என்ன ?
22. மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" (The Medicant Policy) என்றால் என்ன?
23. அன்னிபெசன்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
24. பகிஷ்கிரித் ஹிடாகரினி சபா குறித்து எழுதுக.
25. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?
26. சர் சையது அகமது கான் பிரிட்டிஷ் அரசினை ஏன் ஆதரித்தார்?
27. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக ?
28. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
29. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக
30. மௌண்ட்பேட்டன் திட்டம் பற்றி குறிப்பு வரைக .

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 கட்டாய வினா. 7 x 3 = 21

31. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
32. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
34. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
35. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக
36. 1921 இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?
37. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.
38. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக
39. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை ?
40. முதல் ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகளைப் பற்றி கூறுக

IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 =35

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. (அல்லது)
ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக .
42. அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக. (அல்லது)
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.
43. அ) டாக்டர் அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலாக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக. (அல்லது)
ஆ) 1919-1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.
44. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும். (அல்லது)
45. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக. (அல்லது)
ஆ) பிரிவினைக்குப் பின் இந்தியாவில் கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்
1. ஜம்மு காஷ்மீர் 2. பூடான் 3.பர்மா 4. கிழக்கு வங்காளம் 5.பாகிஸ்தான்
46. அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை கோட்பாடுகள் யாவை ? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக. (அல்லது)
ஆ) ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக
47. அ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க. (அல்லது)
ஆ) இந்திய விடுதலைப் போரில் (1920-1950) நிகழ்ந்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடிட்டு காட்டவும்.

12 – வரலாறு

www.Padasalai.Net



CamScanner